ஸ்ரீகுருப்யோ நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

**சுடர் 9**

## ஸ்ரீஸத்குருவின் ரஸவாதம்

குரவோ பஹவ : ஸந்தி சிஷ்ய வித்தா பஹாரகா:!
தமேகம் துர்லபம் மன்யே சிஷ்ய ஹ்ருத்தா பஹாரகம்!!

–குருகீதை – 3.34

சிஷ்யர்களுடைய பொருளை அபஹரிப்பவர்களாக அனேக குருமார்கள் உண்டு! ஆனால் சிஷ்யனுடைய இருதயத்திலுள்ள தாபத்தை போக்கும் அந்த மாதிரியான 'குரு' கிடைப்பது அரிது.

### 1. குருதத்வம்

"ஸ்ரீகுருவுக்கு ஈடும் இணையும் கிடையாது.– த்ருஷ்டாந்தோ நைவ த்ருஷ்ட: என்கிறது சதஸ்லோகி, உலகில் குருநாதருக்கு இணையானவரே கிடையாது. பலதற்கு உவமை கூறலாம் தாமரைபோன்ற முகம் என்பது போல, ஆனால் மிகச் சிலவற்றுக்கு உவமைப்பொருளே கிடையாது. ஆகாயத்துக்கு உவமை ஆகாயமே கடலுக்கு உவமை கடலே! வேறு பொருளில்லை. அதுபோல் குருவுக்கு குருவே உவமைப் பொருள் வேறு பொருளில்லை. ஸ்பர்சவேதிக் கல்லை உவமையாகக் கூறலாமே எனில் அதற்கும் ஒரு குறை காண்கிறது. 'ஸ்பர்சவேதி' என்றொரு கல். தாமிரத்தை இதன் மேல் படும்படி வைத்தால் தாமிரம் தங்கமாகிவிடும். தாமிரம் இயற்கையிலேயே களிம்பு ஏறக்கூடிய மட்ட ரகமான உலோகம். தங்கம் எப்போதும் ஒளிர்கின்ற உயர்ந்த உலோகம். மட்டமான தாமிரத்தை உயர்ந்த தங்கமாக மாற்றவல்ல ஸ்பர்சவேதிக் கல்லை குருவுக்கு உவமையாகக் கூறலாமே! ஏனெனில் குருவும் கீழ் நிலையுள்ள சிஷ்யனை அறிவாளியாக்கி உயர் நிலைக்குக் கொணர்கிறார். ஆனால் ஸ்பர்சவேதியிடம் ஒரு குறையுண்டு. குருவிடம் அது இல்லை. அதனால் தான் ஸ்பர்சவேதிக்கல்லை குருவுக்கு உவமையாகக் கூற முடியாது. ஸ்பர்சவேதி தன்னை ஒட்டிய தாமிரத்தை தங்கம்ஆக்குவது உண்மைதான். ஆனால் தங்கமான, தங்கமாக மாறிய தாமிரம்

மற்றொரு தாமிரத்தை தங்கமாக்காது. ஆனால் குருவோ தன்னை அண்டினவரை தனக்கு ஈடான குருவாக மாற்றுகிறார். இப்படி மாற்றப்பட்ட சிஷ்யன் தான் குருவாகித் தன்னை அண்டினவனையும் தனக்கு ஈடான குருவாக மாற்றுகிறார். இப்படி ஒரு தீபத்திலிருந்து மற்றொரு தீபம் போல் ஒளி சிறிதும் குன்றாமல் ஒரு பரம்பரை உருவாகிறதெனில், இந்த குரு தத்துவத்துக்கு ஈடானது வெறொன்றுமில்லை என ஸ்ரீபகவத் பாதர்களே தன் அனுபவத்தை கூறி விளக்குகிறார்கள்."

………………என்றிவ்வாறு குருவின் பெருமையை ஜகத்குரு ஸ்வாமிகள் விளக்கி இருக்கிறார்கள்.

இப்படிதான் குருவின் ஸ்பர்சம் ஆத்மனுக்கு ஏற்பட்டது. 1967 ம் வருடம் மே மாதம் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே சாந்தவெளி என்ற ஸ்தலத்தில் ஸ்ரீஆஞ்ஜனேயர் ஸ்வாமி ஸந்நிதியில் முதல் த்ருஷ்டி ஏற்பட்டது. அதன் பிறகே அலைபாய்ந்த அடியேன் மனம் ஒரு நிலைப்பட்டு இல்லறப்ரவேசம் 15.09.67 ல் ஏற்பட்டது. சுருக்கமாக இதனைக் காணுவோம். சுயபுராணமல்ல ரஸவாதமே!

## 2. விடயல் கருப்பூர்

வளம் கொழிக்கும் தஞ்சைத் தரணியின் க்ராமங்களுள் விடயல்கருப்பூரும் ஒன்று. இவ்வூரில் வடமாள் என்கிற ப்ராம்மண வகுப்பைச் சார்ந்த தாயாதிகளான பல குடும்பங்கள். இவர்களின் முன்னோர்களில் சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் அவதூத ஞானியாக இருந்திருக்கிறார். அவருடைய நாமம் "சிவதர்மப்ரம்மேந்திர ஸரஸ்வதி" என்பதாகவும் இவருடைய சீடரான ஞானகுருதீர்த்தர்' என்பவர் ஜீவன் முக்தராகி அருகிலே உள்ள சாந்தவெளியில் இன்றும் ஜீவ சமாதியிலே அமைந்து விளங்குகிறார் என்பதும் 'அருட்சக்தி' யின் அருள் விமர்சம். அதன்பின் வந்த இக்குடும்பத்தாரில் சிலருக்கு ஸந்யாஸம் கிடைத்து அவர்களது ஸமாதிகள் இன்றும் விடயல்கருப்பூரில் ஓடும் குடமுருட்டி (காவிரியின் கிளை நதி) யின் கரையில் அமைந்துள்ளதைக் காணலாம். இவ்வூர் ஸத்குரு நாதருக்கு மிகவும் பிடித்தமான கிராமம் பல சமயம் இங்குதான் தங்கியிருந்தார்கள். இவ்வூரில்தான் அடியேனுக்கு அருள் வாழ்வு கொடுக்க வந்தமைந்தார் ஸத்குரு நாதரவர்கள்.

பாபநாசத்திற்கடுத்த அன்னுகுடி என்ற கிராமத்தில் வாழ்ந்தவர் ஸ்ரீகாமேச்வரானந்த மண்டலி ஸ்ரீவேங்கடசேஷய்யா என்ற ஸ்ரீவித்யா உபாஸகர். இவர் தெலுங்கு 'ஜயந்தி' என்ற பரம்பரை. இவருக்கு குறிப்பிட்ட சில சீடர்கள். அவர்களில் உத்தமதானபுரம் ப்ரும்மஸ்ரீஸுப்ரமண்ய சாஸ்த்ரிகளும் ஒருவர். இவர் தான் அடியேனின் மாமனார். எனவே இவற்றை எல்லாம் விசாரித்து தெரிந்து கொண்டார் ஸத்குருநாதர். அடுத்து வந்த ஆவணி மாத ஸங்க்ரமணதினத்தன்று (17.8.74) அடியேனையும் பத்னி புவனேஸ்வரியையும் ஸ்ரீவித்யா உபாஸனையில் பிரவேசப் படுத்தினார்கள். ப்ரஹ்மவித்யாப்ராப்தியின் முதல் அனுக்ரஹத்தை அடையும் பேறு பெற்று தன்யனானேன்.

## 3. குருவும் சீடனும்

சாந்தவெளி என்ற தலத்தில் இவர்களை முதன் முதலாக கண்டேன் அந்த 1967 ஜனவரி மாதம் முதல் அன்று வரையில் அடியேன் மனதில் கனவோவியமாய் திகழ்ந்ததுஸத்குருவினுடைய திருமுகமே. அலையும் மனதை அகத்தடக்கி ஆண்டவரல்லவா, எனவே தான் அவர்களையே ஸத்குருவாய் அடைந்ததில் ஆச்சர்யமில்லை. விடயல் கருப்பூர் க்ராமத்தில் ஸத்குருவின் சீடர்களாக பலருண்டு. மேலும் பரமகுரு ஸ்ரீசிதானந்தரின் சீடர்களில் ஒருவரும் அவ்வூரில் உண்டு. அவர் ஸ்ரீ A கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்கிற மிராசுதார். அவரே ஸத்குருநாதரின் ஆப்த நண்பர். அவருடன் ஸத்குரு சம்பாஷித்திக் கொண்டிருக்கும் பல நேரங்களில் அடியேனும் உடனிருந்ததுண்டு. ஸத்குரு விடயல்கருப்பூருக்கு ஆண்டிற்கு ஒருமுறை இருமுறை வந்து தங்குவார்கள். அவர்கள் அங்கு தங்கும் காலத்தில் அதிகாலை 4.30 மணிக்கு எழுந்து அடியேனின் க்ருஹத்திற்கு வந்து விடுவார். மானஸீகமாக, ப்ராத க்ருத்தியங்களையும் "ஸ்ரீதிவ்ய மங்களாத்யானம்" என்கிற (105) ஸ்லோகங்களையும் ரச்மிமாலா, அஜபா, தக்ஷிணாமூர்த்திஅஷ்டகம், உபநிஷத்துக்கள் என்று சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். அப்போதெல்லாம் அவர்கள் சொன்னதன் விவரம் என்ன என்பது அடியேனுக்குத் தெரியாது. ஆனால் 'உபாம்சு' வாகமெலிந்த ஸ்வரத்தில் அவர்கள் மனப்பாடமாக சொல்லி வரும்போது ஆச்சரியத்துடன் ச்ரவணம் செய்திருக்கிறேன். மாலைப்பொழுதில் அருகிலே உள்ள குடமுருட்டி நதியின் மணலில் சென்றமர்ந்து விடுவோம். அவர்கள் மணிக்கணக்காக தன் வாழ்கையைப் பற்றியும், உபாசனை பற்றியும். தைவீகக்கதைகளையும், மந்த்ரரஹஸ்யார்த்தங்களையும் அவர்கள் போக்கில் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அடியேனுக்குப் புரியாத இடங்களை வினவும் போது சில நேரம் விளக்கமாகக் கூறுவார்கள். சில

நேரம் சும்மா கேட்டுக்கொண்டு வா! அது போதும் பின்னால் உனக்கே தெரியும் என்றும் கூறுவார்கள். 1966 மே மாதம் முதல் அடியேனுக்கு ஏற்பட்டிருந்த 'அருட்சக்தி' விகஸிப்பினால் எழுதப்பட்ட பல கட்டுரைகளை அவர்களுக்கு படித்துக் காட்டுவேன். கண்மூடி மிகவும் ரஸித்து அதனை அனுபவிப்பார்கள். அப்படி அவர்களால் ரஸிக்கப்பட்டு அச்சிட்டு வெளியிட வேண்டுமென்று விரும்பியவற்றுள் சில ஸ்ரீஸ்யாமளா தண்டக விளக்கவுரை, லலிதலாவண்யம் என்பன. ஸத்குருவின் சீடர்களில் ஒருவர் ஸ்ரீ S. S. சர்மா சென்னையிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த 'மாலா' என்ற பத்திரிகையை நடத்தி வந்தார். அவரிடத்தில் நேரில் சொல்லியும், கடிதம் எழுதியும் அடியேனின் கட்டுரைகளில் சிலவற்றை மாலாவில் ப்ரசுரிக்கச் செய்தார்கள். அவற்றுள் சில 'ப்ரணவம், பெருவாழ்வு கொடுக்கும் பதினாறு, பேறு பெற்றவன் புகழ் வெல்க, காலக்கணக்கு, முதலியனவாகும்.

## 4. திருவாரூர் காமகலா

ஒரு சமயம் விடயல்கருப்பூரில் தங்கியிருந்த நேரம். திருவாரூரில் (காமகலாக்ஷேத்ரம்) ஆடிப்பூர உத்ஸவ காலம். அதற்கு அடியேனும் குருநாதரும் சென்றிருந்தோம். அங்கு அம்பாளின் ஆடிப்பூர அபிஷேகக் காட்சி கண்கொள்ளா வைபவம். இருவரும் அனுபவித்தோம். பின்பு ஸ்ரீஅம்பாள் ஸந்நிதியின் வெளிவாசலில் வலதுகைப்புறமுள்ள ஸ்ரீஉச்சிஷ்ட கணபதி ஸந்நிதியில் சிறிது நேரம் நின்றுவிட்டு ப்ராகாரத்தில் சென்றமர்ந்தோம். அப்போது உச்சிஷ்ட மஹாகணபதியின் ஸ்வரூப ரஹஸ்யங்கள் பற்றியும் உபாஸனைப்பற்றியும். சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக பேசியிருக்கிறார்கள். அதுவரை அந்த கணபதியின் பெயரை மட்டுமே தெரிந்துகொண்டிருந்தவனுக்கு அதன் மகிமையை தெள்ளிதின் உணர்த்தி விளங்க வைத்தார்கள். அப்போது தான் ஆந்த்ரமாக செய்யவேண்டிய ஸ்ரீசக்ரஆராதனம் பற்றி கூறி அதற்கு உபமானமாக நடந்த நிகழ்ச்சி ஒன்றை கதை வடிவில் கூறினார்கள். அந்த கதையினை அவர்கள் எழுத்து நடையிலேயே அப்படியே எழுதுகிறேன்.

## 5. உள்முக வழிபாடு – தீர்க்கதர்சனம்

"தாம்ப்ரவர்ணி, கோதாவரி முதலான தீர்த்தக்கரைகளில் வஸித்துக் கொண்டு ஸோமயாகம் முதல் வாஜபேயாந்தம் யாகங்களை அனுஷ்டித்த மஹான்கள் சிவ சக்திமயமான ஸ்ரீசக்ராராதனத்தை அந்தரங்கமாக அனுஷ்டித்து வருவதை

இப்போதும் காணலாம். ஸோமயாகம் முதலான யாகங்கள் பஹிரங்கமாகவே செய்ய வேண்டும். ஸ்ரீசக்ராராதனம் மோக்ஷ ஸாதனமானதால் அந்தரங்கமாகவே தான் செய்ய வேண்டும். ச்ருங்ககிரியில் தற்சமயம் பீடாதிபதிகளாக விளங்கும் பெரிய வாளின் பரமகுருநாதானான ஸ்ரீந்ருஸிம்மபாரதி என்ற பெரியவாள் அநேக ஊர்களுக்குச் சென்று பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்து அனுக்ரஹம் செய்து கொண்டு வரும் போது ஓர் ஊர் சென்றார்கள். அந்த ஊரில் கொட்டகை போட்டு இருந்து அதில் பூஜை ஆராதனம் செய்தார்கள். பூஜை செய்பவர் பூஜை செய்யும்போது முதலில் அம்பாளை அந்தரங்கமாக ஹ்ருதயத்தில் பூஜை செய்து பிறகு தான் பஹிரங்கமாக பூஜை செய்வார்கள். அது போல் இங்கும் பெரியவாள் ஒரு நாள் அந்தரங்கமாக பூஜை செய்யும் போது அம்பாளுக்கு கிரீடத்தை வைத்துப் பிறகு முத்துமாலையை அணிவிக்கும் போது முத்துமாலை கிரீடத்தை விடச்சின்னதாக இருந்ததால் கிரீடத்துக்குள்ளாக செல்லவில்லை. இவ்விதம் இரண்டு மூன்று முறை பார்த்தார். மாலைகிரீடத்தைத் தாண்டிச் செல்லவில்லை. இந்நிகழ்ச்சி அவர்களுடைய மனஸிலேயே தான் நடந்தது. அப்போது அவர் காதில் ஒரு குரல் கேட்டது:– "நாம் வைத்த கிரீடத்தை எடுத்து கீழே வைத்துவிட்டு மாலையை இட்டால் என்ன?" என்று ஒரு கேள்வி கேட்டதும் –இவர்கள் மானஸிக பூஜை நின்று விட்டது. ஓர் ஆளை விளித்து "இவ்விடத்தில் ஓர் மஹான் எங்கோ இருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்." – என்று உத்தரவு பண்ணினார்கள். அப்போது அங்கிருப்பவர்கள் "இங்கு ஒரு மஹானும் கிடையாதே !" என்றார்கள். அதற்கு இவர்கள் கண்டிப்பாக யாரோ இருக்கிறார்கள். அவர்களை நான் அவசியம் காணவேணும் என்று திரும்பவும் கூறுகிறார்கள். ஆனால் கூட்டத்தில் ஒருவர் சொன்னார். பெரியவர் யாரும் இல்லை. ஒரு பைத்தியம் தான் இருக்கு. அது நித்தியம் காலையில் தெருவுக்கு செல்லும். அப்போது தெருவிலுள்ளவர்கள் ஒரு பிடி பழைய சாதத்தைக் கொடுப்பார்கள். அதை ஒரு கந்தலில் கட்டிக் கொண்டு அந்தக் குளத்தின் கரையில் இருக்கும் அரசமரத்தின் கிளையில் கட்டித் தொங்கவிடும். பிறகு தன் வயிற்றைப் பார்த்து – " டேய்! பசித்தால் சாப்பிடு! என்னை தொந்தரவுசெய்யாதே! என்று சொல்லி வாய்க்கு வந்தபடி உளரிக் கொண்டிருக்கும். இது தவிர வேறு யாரும் இல்லை." என்று சொன்னார். உடனே

பெரியவாள்– அவரை நான் பார்க்க வேண்டும் என்றார்கள். உடன் ஒருவர் சென்று – அந்தப் பைத்தியத்தினிடம்– "பெரியவாளுக்கு தங்களைப் பார்க்கவேணுமாம்" என்று சொல்ல – அந்த பைத்தியமும் "எனக்கு ஒரு பெரியவாளையும் பார்க்க வேண்டாம்" என்று சொல்ல அதனை – பெரியவாளிடம் தெரிவிக்க அவருக்கு என்னைப் பார்க்க வேண்டாம். எனக்கு அவரைப் பார்க்க வேண்டும். என்று சொல்லி பெரியவாள் கிளம்பி வந்தார்கள். அப்போது பைத்தியமும் "பீடத்துக்கு மரியாதை கொடுக்க வேணும்' என்று சொல்லிக் கொண்டு எதிரே வந்தார். உடன் பெரியவாளும் அவரை எதிர் கொண்டழைத்து உள்ளே போய் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு அந்த பைத்தியமும் மற்றவர்களிடம் எதுவும் சொல்லாமல் சென்று விட்டது. பெரியவாள் எல்லோரையும் பார்த்து "நீங்கள் அவரைப் பைத்தியம் என்று சொன்னீர்கள். ஆனால் அவர் அதுபோல் இல்லை. ஓர் மஹான். ஸித்த புருஷர். அவர்களை நீங்கள் பழையத்துச்சாமி என்று கிண்டல் செய்யாதீர்கள். ஆகாயத்தில் பொத்தல் விழுந்தால் அதை கொசுவின் இறக்கையால் தைத்துவிடலாம். ஆனால் மஹான்களை உங்களால் அறிய முடியாது. பசுவின் ஸ்தனங்கள் வழியாக கறந்த பாலைக்கூட அதன் வழியாகவே உள்செலுத்தி விட்டாலும் விடலாம். மஹான்களின் இயல்பை உங்களால் அறிய முடியாது." என்று கூறி பூஜை செய்துவிட்டு மறுநாள் அந்த ஊரை விட்டு கிளம்பிவிட்டார்கள். அந்த ஊரில் மறுநாள் காலை வழக்கம்போல் அந்த மஹான் – பழையதுக்கு வந்தார். ஊர் ஜனங்கள் இவருக்கு பழையதையா கொடுப்பது என்று நினைத்து ஆளுக்காள் வடை பாயஸம், அன்னம் என்ன, பக்ஷயங்கள் என்ன என்று கொடுக்கவந்தார்கள். ஆனால் அவைகளை அவர் வாங்கவில்லை. இரண்டு நாட்கள் இதே போல் நடந்தது பிறகு அவரை அந்த ஊரில் காணவில்லை."

(Above paras all typed from Sri guruji's handwritten articles)

பிறகு அன்று மாலை கமலாலயத்தின் கரையில் வெகுநேரம் கமலையாகிற காமகலையின் தத்வங்களை அற்புதமாக விளக்கினார்கள். இவைகளின் சுருக்கமாக பிந்நாட்களில் ஆத்மனால் "ச்ருஷ்டி காமகலை என்ற வ்யாஸம் (தத்தப்பிரஸாதம் –என்ற மாத பத்திரிகையில் வெளியானது) எழுதப்பட்டது. இவ்வாறு பலநேரங்களில் உபதேச காலம் என்று மட்டும் தனியாக ஒதுக்கிக் கொள்ளாமல் அடியேனுடைய உத்யோக,

லௌகீக அலுவல்களிக்கிடையேயெல்லாம் ஞானோப தேசம் செய்து – சிஷ்யர்களுடைய சித்தத்தை அபஹறிப்பவர்தான் ஸத்குரு என்பதற்கு நிருபணமாக இருந்தார்கள். எனது நண்பரும் – தீக்ஷா ஜேஷ்டருமான, ஸ்ரீடாக்டர்" P.V.B.மஹாதேவ் அவர்கள் கனரா வங்கியில் Senior Manager ஆக இருந்து ஓய்வு பெற்றவர். அவரும் அடியேனைப் போல் ஸத்குருவிடம் அனேக அனுபவங்களை அடைந்தவர். இவர்தான் அடியேன் தொகுத்த "ஸ்ரீமஹாகணபதிமந்த்ர வழிபாடு" புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டவர்கள். இஞ்சிக்கொல்லையில் யக்ஞபரம்பரையில் வந்தவரும் குருநாதரிடம் தீக்ஷை பெற்று தற்காலம் சென்னையில் வசிப்பவருமான ப்ரம்மஸ்ரீ Y. வேதமூர்த்திசாஸ்திரிகள் தான் அடியேன் தீக்ஷை காலங்களில் உடன் இருந்து பூஜைகள் செய்து உதவியவர். அவர்களை என்னால் மறக்க இயலாது. அவர் என்னிடம் கொண்டிருந்த அன்பின் ஆழம்தனியானது திதிநித்யா படம் வெளியீட்டில் உறுதுணையாக இருந்தவர்.

## 6. குணமும் – விருப்பமும்

குருநாதரின் கருத்துக்கள் மிக ஆழமானவை. ஆண்டாண்டுகளாய் அனுபவித்து, அனேக உறவுகளில் ஊடாடி, அங்குமிங்கும் அகிலத்தில் அலைந்து. அன்பர்கள். நண்பர்கள். பண்பாளர்கள் அறிஞர்கள் மஹான்கள் பீடாதிபதிகள், ஸந்நியாஸிகள் என பலருடன் பழகிய முதிற்சியின் பயனாய் தெளிந்து வருபவை அவை. வேத விற்பன்னர்களைக் கண்டால் வேத, உபநிஷத்து அர்த்த விசாரம் செய்வார். சாஸ்திரிகள் சிலரைக் கண்டால் வேதகர்மாக்கள் செய்யும் விதம் பற்றியும், கர்மாவின் அவசியம் பற்றியும் அலசுவார். ஸங்கீத வித்வான்களிடம் பேசும் போது – ராகம், தாளம், அதில் பொதிந்துள்ள ரகஸியங்கள் என உடன் உள்ளவர்களும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் விமர்சிப்பார். பௌராணிகர்களைக் கண்டால் விடவே மாட்டார். அவர்களிடம் புராண, வசன, கதைகளை கேட்டு அவர்களின் சொந்த அனுபவங்களை அவர்களிடம் வினவுவார். அவர்கள் அப்போது தான் நாம் இதுவரை சொன்ன கதைகள் பிறருக்கானவை. அதில் நாம் உணர வேண்டிய கருத்துக்கள் ஏராளம் என்பதை உணருவர். வேலை செய்வோர், உத்தியோகம் பார்ப்போர். பள்ளிக்கூட, கல்லூரி மாணவ மாணவிகள், ஆகியோர்களிடமும் இவர்கள் பேசும் போது – அவரவர்கள் நிலையில் நின்று பேசி அவர்கள் இவரை தன் தோழனாகவே உணரும் வண்ணம் உரையாடுவதில் வல்லவர். இவர்கள் அனுஷ்டானம், ஜபம், தவம், பூஜை ஹோமம் என செய்யும் போது – அதனதன் லக்ஷணப்படி செய்வதில் வல்லவர். பூஜா. ஹோமங்களில் த்ரவ்யங்கள், பாத்திரங்கள் – அதனதன் இடத்தில் சரியாக இருக்க வேண்டும் என்பதில் கண்டிப்பானவர். கர்மாவில்

முழு ஈடுபாட்டுடன் செய்து அதன் பல ப்ராப்தியை கண் முன்னால் நிறுத்திவிடுவார்கள். இவரது செயல்களினாலேயே இவரது புகழ் வெளிப்பட்டுவிடும். ஆடம்பரத்தில் பிரியமில்லாதவர். பேச்சில் – சற்று படபடப்பு காணப் படினும்– உள்ளத்தில் அமைதி கொண்டவர் என்பது நெருங்கியவர்க்கு புரியும். கவிக்குக் காளிதாஸன் என்பர். ஆனால் அதே போன்ற கவிதா நயம், ரஸனை, வர்ணனை தத்வங்கள் இவரது கவிதைகளிலும் காணலாம். கதைகளை கவிதைகளில் இணைக்கும் பாங்கு காணக்கிடைக்காத ஒன்று. சந்தங்கள் துள்ளியோடும் வெள்ளியாறு இவரது கவிதைகள் எனலாம்.

துயிலெழுப்பும் பூபாளக்குரல்கள் இவரது ஸுப்ரபாதங்கள்.

லயதாள அமைப்பில் லயித்துவிடும் மனம்.

அடியேனுக்கு ஸத்குருவின் குணவிலாஸங்களை புகழும் பாக்கியம் இங்கு ஏற்பட்டதானது. முன்ஜன்ம வினையின் தொடர்பேயாம்.

## 7. ரஸவாதம்

1974 ல் தொடங்கிய ஸ்ரீவித்யா உபாஸனா மந்த்ரோபதேசம் பிங்கள வருடம் தைமாதம் க்ருத்திகையில் (1978) பூர்ணதீக்ஷை கொடுத்து – அடியேனுக்கு மஹாவித்யையை அருளி தன்யனாக்கிறார்கள். கிடைப்பதற்கரிய இந்த மஹாபாக்யத்தினால், ஜடஜன்மாவாக இருந்த வ்யக்தியை உபாஸகன் என்ற தகுதிக்கு உயர்த்திய தன்மையினால் – இதனை "ரஸவாதம்" என்கிறேன். ஏனெனில் ஜடப்பொருளை ரஸவாதம் செய்து வேறு பொருளாக மாற்றுவதில் ஏதும் அதிசயமிருப்பதாக தோன்றவில்லை. ஜீவசைதன்யம் தறிகெட்டு ஓடிய மனம், ஸம்ஸாரச்சிக்கல் – இவைகள் உடைய ஒருவனை –ஒருநிலைப்படுத்தி – ஸம்ஸ்காரங்களினால், உபதேசத்தினால் – தன் இனிய மொழிகளால் – தீக்ஷை என்கிற மஹா வைபவத்தினால் தெளிந்த நீரோடையாக, பக்திவேதாந்த அருட்பயிர் தழைக்கும் பண்பட்ட பூமியாக மாற்றியிருக்கிறார் என்றால் இதுவல்லவோ ரஸவாதம், முன்பு ஆசார்யாள் கூறிய குருதத்வம் நடத்தும் விந்தை. கற்றுக் கொடுப்பது – ஸத்சிஷ்யர்களை உருவாக்குவது என்பது ஒரு தனியானகலை. அறிவு, அனுபவம், எழுத்து, பேச்சு ஸாமர்த்தியம் உபாஸனாபலம், குருக்ருபை, இத்தனையும் உடைய ஸத்குரு – ஸாதாரண ஒரு ஜீவனை சிஷ்யனாக ஏற்று. அவனை அறிவாளியாகவும், அனுபவசாலியாகவும், ஏன் ஆக்கமுடியாது? இதுதான் இவர்களுடைய சிறப்பு. குருநாதர் என்பவர் – ஸாதகனுடைய உள்ளத்தை அவனறி யாமலேயே மாற்றி அமைத்து அவனை நல்ல வழியிலே வழி நடத்தி செல்லும் அருட்கருணையை விட ஆச்சர்யப்படத்தக்க அற்புத ரஸவாதம்

வேறு ஏதேனும் உண்டா? சேர சோழ பாண்டிய சாம்ராஜ்யங்களில் வாழ்ந்த சிற்பிகள் கல்லிலே உருவங்களை செதுக்கி அவற்றை பேசும் பொற் சித்திரங்களாக பாவைகளாக. தெய்வங்களாக மண்டபங்களாக வடித்தார்கள். இதைப்போன்ற அற்புத சிற்பங்கள் நிறைந்த சிவாலயம் ஒன்று – கும்பகோணம் அருகே தாராசுரம் என்ற இடத்தில் இருக்கிறது. இது "பழையாறை" என்ற புராதனப் பெருமை வாய்ந்தது. சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இங்குள்ள ஒரு சிறப்பு இது பற்றி கூறவே இந்த பூர்வ பீடிகை தேவையாகிறது. இந்த ஆலயத்தின் முன்புறமுள்ள பலி பீடத்தில் – சில படிகள் உள்ளன. அந்த படிகளில் போடப்பட்டிருக்கும் கற்களில் நாம் கீழேகிடக்கும் ஏதோவொரு செங்கற்களைக் கொண்டுதட்டினோமானால் ஸப்தஸ்வரங்களும் (ஸ,ரி,க.ம,ப,த, நி) ஒலிப்பதை இன்றும் கேட்கலாம். நாளையும் கேட்கலாம். ஒரு சிற்பி – கல்லிலே தன்னுடைய மனோகற்பனையினாலே அழகான தெய்வ வடிவங்களை செய்கிறான். அதனை புனிதமான இடத்தில் – வைத்து போற்றி பூசனைகள் புரிகிறோம். ஆனால் அதே போன்ற கல்லில் – மழை, வெயில், பனி போன்ற இயற்கை மாறுபாடுகளில் ஆட்படும் நிலையில் கிடக்கும் ஒரு கல்லில் 800 ஆண்டுகளாக தொடர்ந்து இந்த ஒலி இன்றுவரை ஏற்பட்டு வருகிறது என்றால் கோடிக்கணக்கான கற்களில் – சங்கீதக் கற்களைத் தேர்ந்தெடுத்த அந்த சிற்பியின் ஞானந்தான் என்னே! இதுபோல்தான் – ஸத்குருநாதர் தன்னருகே – ஆயிரக்கணக்கான மனிதர்களை, ஸாதகர்களை சிஷ்யர்களை கொண்டிருந்தாலும் அவர்களில் பலருக்கு ப்ரபஞ்சத்தில் மாலை மரியாதை கிடைக்கலாம். ஆனால் தட்டினால் மட்டுமே தனக்குள் இருக்கும் ஸங்கீதத்தை வெளிப்படுத்தும் ஸங்கீதக்கற்களைப் போல் – ஒரு சிலரும் இருப்பார்கள். இது போன்ற ஒரு ஸங்கீத கல்லாக இருப்பதில் அடியேனுக்குப் பெருமையே!

## 8. அருட்பணி

ஸத்குருவினால் அடியேனுக்கு இடப்பட்ட அருட்பணிகள் தொடர்கின்றன:–

1 ஸ்ரீ'வித்யா ஸபர்யை – பத்ததிப்படி செய்யும் காலத்தில் – ஸ்ரீசிதானந்த நாதரின் – "வாஸனா விமர்சம்" கூறும் தத்வரஸனைகள் நிறைந்த கடல் நீரில் காணப்பட்ட அலைகளின் பரிணாமமாக அபூர்வ தத்வங்களைக் கொண்ட மேலும் சில அலைகளாக "தத்வப்ரகாசம்",

2 வேதாந்த பரமான – உபநிடதங்கள், மஹா மந்திரங்கள் இவைகளில் ஆங்காங்கே உள்ள சிற்சில கருத்துக்கள் ஸ்ரீவித்யா உபாஸனையில்

எவ்வாறு பொருந்துகிறது என்ற உண்மையை விசாரித்துக் கொண்டே செல்லும் உண்மை உலா.

3 குருநாதர் குறிப்பிட்ட "ஸ்ரீபஞ்சகத்தில்" கண்ட ஸ்ரீசூக்தத்தில் – பஞ்சதசீ மந்த்ராக்ஷரங்கள் எவ்வாறு உட்பொதிந்துள்ளது என விளக்கி இவ்வாறும் இருக்கலாமோ என்ற நிலையில் உள்ள ஸ்ரீசூக்த உரையான வேதத்தில் வித்தை.

4 ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தின் திரண்ட பொருளை சுருக்கமாகக் கூறும் ஸ்ரீலலிதலாவண்யம்.

5 ஸ்ரீவிக்னேசரின் வல்லபேசோபநிஷத்துக்கு எழுதப்பட்ட தமிழ் உரையான எல்லாம் வல்ல வல்லபேசர்.

6 செல்வத்தின் ஆதிநாயகியாம் லக்குமியின் பெருமைகளைக் கூறும் – அவளது அஷ்டோத்தர நாமாவளிக்கு – லலிதையின் நாமாக்களின் தாத்பர்யமாக எழுதப்பட்ட திருப்பெயர்கள் நூற்றெட்டு.

7 ஸ்ரீதேவியின் பர – அபரரூபங்களையும், அவளது மஹாவித்யா மந்த்ரங்களின் தோற்றத்தையும் கூறும் – ஸ்ரீதேவி அதர்வசிர உபநிஷத்துக்கு, தமிழில் நீண்ட விளக்கஉரையுடன் கூடிய, "வேதசக்தி"

8 ஸ்ரீமஹாகணபதியின் அதர்வசிர உபநிஷதத்திற்கு எழுதப்பட்ட தமிழ் உரையான " கணபதி உபநிடதம்"

9 சூர்யபகவானின் வேதகுணங்களுடன் கூடிய பழமையான, மிகவும் பெருமை வாய்ந்த துதிக்கான விளக்கவுரையுடன் கூடிய "ஆர்யாத்வாதசஸ்துதி"

10 உபாஸகர்களுக்கும் பக்தர்களுக்கும் உபயோகமாகும் விதத்தில் "கலசப் ரதிஷ்டைதத்வம் மற்றும் லக்ஷார்ச்சனாவிதி"

11 தேவியைப் பற்றின ரஹஸ்யங்கள் தத்துவங்கள் அடங்கின "மகாசக்தி ரஹஸ்யம்"

12 குருநாதரே ஆக்கிய கணபதிமந்த்ரபதமாலாவுக்கு எழுதிய தமிழுரையான கணபதி மந்த்ர மாலை"